DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 33/2014 PW : 2

Name : சீனிவாசன் Age –

S/o : ஸ்ரீதரன் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 18.11.2025.

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) இந்த வழக்கை என் தந்தை தான் தாக்கல் செய்தார். அவருக்கு வாரிசுதாரர் என்ற முறையில் நான் சாட்சி சொல் வந்துள்ளேன். அவர் தாக்கல் செய்த தாவாவின் விவபரம் எனக்கு தெரியும். என்னுடன் பிறந்தவர்கள் 3 பேர். நான், எனது தங்கை, ஒரு தம்பி உள்ளார். நான் சென்னையில் வசித்து வருகிறேன். என் தம்பி டில்லியில் பணிபுரிந்து வருகிறார். என் தங்கையில் சிங்பூர் மற்றும் இங்கு மாறி மாறி இருப்பார். நாங்கள் படித்து வளர்ந்தது எல்லாம் சென்னையில் தான். நான் 40 வருடமாக சென்னையில் தான் வசித்து வருகிறேன். பேரம்பாகத்திலிருந்து சென்னைக்கு சென்று 40 ஆண்டுகள் இருக்கும். என் தந்தை கடைசியாக மாவட்ட வருவாய் அலுவலராக இருந்தார். அவர் 1994ம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றார். என் அப்பா செலவில் தான் என்னை படிக்க வைத்தார். என் தங்கைக்கும் அவர் தான் திருமணம் செய்து வைத்தார். கடைசியாக அவர் ரூ.65,000/- பென்சன் தொகை பெற்று வந்தார்.

2) நான் தற்போது இருக்கும் அண்ணா நகர் வீடு என் தந்தைக்கு அவுசிங் போடு மூலமாக 1970ம் ஆண்டு ஒதுகீடு செய்யப்பட்டது. அப்போது அது காலியாக தான் இருந்தது. 1982-ல் கட்ட ஆரம்பித்தார் 1984-ல் குடிபெயர்ந்தார். 1984ம் ஆண்டு அவர் என் பதவியில் இருந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை.

அந்த வீடு கட்டுவதற்கு என் தாத்தா எந்த உதவியும் செய்யவில்லை. என் தாத்தா ரங்கையநாயுடு தான் என் தந்தைக்கு வீடு கட்ட உதவினார் என்றால் சரியல்ல. அண்ணா நகர் சொத்தையும் இந்த வழக்கில் சேர்ப்பதற்கு உத்தரவாகியுள்ள விபரம் எனக்கு தெரியும். அந்த உத்தரவை எதிரித்து என் தந்தை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து அது தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும். அதை எதிரித்து உச்சநீதிமன்றத்தில் நான் எந்த வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை.

3) தாவாவில் எத்தனை அட்டவணை சொத்துக்கள் உள்ளன என்பது தெரியும் ஆனால் அதன் குறிப்பிட்ட சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. எந்த எந்த அட்டவணை சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ள என்ற விபரம் தெரியாது. தாவா அட்டவணை ஏ செட்டியீல் 20 மற்றும் 21 அயிட்டம் எண்கள் 2ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் வாங்கி சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. 72 மற்றும் 83 ஆவணங்கள் மூலமாக 2ம் பிரதிவாதி அந்த சொத்துக்களை தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. தாவா ஏ அட்டவணை சர்வே எண்.622/2, 622/5, 622/4, 625/2 உள்ள 1.74 ஏக்கர் 1983ம் வருடமே அவர் தனிப்பட்ட ஆவணம் மூலம் கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உள்ள சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்று என் தந்தை தாவாவை தாக்கல் செய்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தா ரங்கையநாயுடு 2ம் பிரதிவாதிக்கு சில சொத்துக்களை செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்று சொன்னால் ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டேன்.

4) 1994ம் ஆண்டு அந்த செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார். 1995ம் ஆண்டு அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரங்கையநாயுடு ரத்து செய்துவிட்டார். அந்த ஆவணங்கள் ரத்து செய்த பின் ரங்கையநாயுடு பெயருக்கு மீண்டும் மாறிவிட்டதா என்ற விபரம் தெரியாது. இன்றைய தேதிவரை அந்த சொத்துக்களின் வருவாய் ஆவணங்கள் 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது

என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதனால் தான் என் தந்தையால் இது சம்மந்தமாக எந்த ஆவணமும் தாக்கல் இயலவில்லை என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை ரத்து செய்ய என் தந்தை தான் காரணம் என்றாலும் ரங்கையநாயுடுவின் வயதை பயன்படுத்தி கொண்டு என் தந்தை தான் அவ்வாறு செய்துள்ளார் என்றால் சரியல்ல. பத்திரத்தை ரத்து செய்த பின்பு 2ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு எதுவும் என் தந்தையோ அல்லது ரங்கையநாயுடுவே அனுப்பினார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்படாததால் எந்த வித அறிவிப்பும் அனுப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏ அட்டவணை சொத்து கூட்டு குடும்ப சொத்து அல்ல என்றாலும், 2ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. பேரம்பாகத்தில் தற்போது என் பயிர் செய்துள்ளார் என்ற விபரம் தெரியாது. அதில் எவ்வளவு பம்பு செட், விஸ்திரணம் பற்றி எனக்கு தெரியாது. நானோ, என் தங்கையோ, பேரம்பாக்கம் சொத்திற்கு வந்தது கிடையாது என்றாலும், அதை கூட்டு குடும்ப சொத்து என்றா இல்லை என்றாலும் சரியல்ல. நான் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தாததால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டடம் என்றால் சரியல்ல. எவ்வளவு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார் என்று தெரியாது. தவறான சட்டப்பிரிவு அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5) ராஜாராம் நாயுடு என் பாட்டியின் சகோதரர். தாவா D, E, F அட்டவணை சொத்துக்கள் ராஜாராம் நாயுடுக்கு சொந்தமானது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்துக்கள் ராஜாராம் வகையறா பிரிவை சார்ந்த சொத்துக்கள் என்றாலும், அது ரங்கையநாயுடுவின் பாகத்திற்கு வராது என்றால் சரியல்ல. ஸ்ரீராமலுநாயுடு என் பாட்டியின் இன்னோரு சகோதரர். அவருக்கு சொந்தமான சொத்து இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் தந்தை சேர்க்கவேண்டிய சொத்துக்களை விட்டுவிட்டு தேவையில்லாத சொத்தை சேர்த்து இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 27 லட்சம் ஈட்டிய விபரம் RTI மூலமாக என் தந்தை தெரிந்து

கொண்டார். வருடத்திற்கு ரூ.9 லட்சம் ஈட்டியதாக சொல்லியுள்ளார். அந்த விபரத்தை இந்த வழக்கில் சரியாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் எனக்கு எந்த வித நஷ்டஈடும் தரவேண்டியதில்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**இதர பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது**

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2025.11.18 10:15:11 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.